# 40. அத்யந்தகாமம்*

இரா.கலைக்கோவன், திருச்சிராப்பள்ளி.

மாமல்லபுரத்தின் தென்பகுதியில் கடற்கரையிலிருந்து சற்றுத் தள்ளி அமைந்திருக்கும் ஒருகல் தளிகள் ஐந்தும் பல்லவர் கலைநயம்பேசும் சிற்பச் செழுமைகள். இவற்றுள் ஒரே வரிசையில் அமைந்திருக்கும் நான்கு தளிகளுள் தென்கோடியில் காட்சிதரும் பெருந்தளி உள்ளூர் மக்களால் தர்மராஜரதமென்று உவந்தழைக்கப்படுகின்றது.

மேற்குப் பார்த்த இப்பெருந்தளி முத்தள ஒருகல் தளியாகும். குன்றொன்றை மேலிருந்து செதுக்கி, இரண்டு முன்றில்களும் மூன்று தளங்களும் மூன்று கருவறைகளும் நான்கு முகப்புகளும் எண்ணற்ற சிற்பங்களும் அமைத்துப் பழந்தமிழர்தம் பொறியியல் சிந்தனை வளர்ச்சியின் விரிவையும் அவர்தம் அழகியல் அறிவின் உச்சத்தையும் பல்லவ உளிகள் பொருத்தமுற வடித்துக் காட்டியிருக்கும் இத்தளியே, தமிழ்நாட்டுக் குடைவு செதுக்குப் பணிகளுள் தலையாயதெனலாம். பல முதல்களுக்குச் சொந்தமான இத்தளி நாகர தளங்களைக் கொண்டிருப்பதாலும் இதன் கிரீவ, சிகர அமைப்பு எண்முகமாக இருப்பதாலும் இதைக் கலப்புத் திராவிட விமானமென்றழைப்பதே பொருந்தும்.

**கட்டமைப்பின் சிறப்புக் கூறுகள்**

பல்லவர் கட்டடக் கலையில் மட்டுமன்று, தமிழ்நாட்டுக் கலை வரலாற்றிலேயே தர்மராஜரதம் ஒரு திருப்புமுனையெனலாம். செதுக்குத் தளிகளைப் பின்பற்றியமைந்த கட்டுத்தளிகளின் பல்வேறு அமைப்புகளுக்கு அடிப்படையாய் அமைந்த பெருமை இத்தளிக்கு உண்டு.

வடக்குத் தெற்காய் மல்லையில் உருவான நான்கு செதுக்குத் தளிகளுள் முதல் மூன்றினும் மேம்பட்டதாய், பல முதல்களுக்குச் சொந்த மானதாய், முழுமுதற் கடவுளுக்கமைத்த முதல் முழுத் திருக்கோயிலாய் இம்முத்தள ஒருகல் தளியை உருவாக்கினர் பல்லவச் சிற்பிகள். விமானம் எனும் ஆறங்க அமைப்பை முதலில் பெறும் அருச்சுனர்தளியில் கருவறை யில்லை. கருவறை பெற்ற கொற்றவைத்தளியில் ஆறங்கப் பார்வையில்லை. அகன்று விரிந்து ஆறங்கம்பெறும் பீமத்தளியில் படுக்கை மட்டுமே; பராந்தாமன் இல்லை. தள்ளியமைந்துள்ள தூங்கானைத்தளி, தனியாய் அமர்ந்துள்ள கணேசர்தளி, குட்டைக்கருகில் காணப்படும் வலையன்தளி, பிடாரிக்குப் பக்கத் துணையாகியுள்ள எண்ணங்க, நாகரத்தளிகள் என மல்லையில் மலர்ந்த செதுக்குத் தளிகள் எவற்றிற்குமே, 'இறைவன் இனிதமர்ந்த விமானம்' எனும் இணையற்ற பெருமை இல்லாமலே போய்விட்டது.

---

* தவத்திரு நாச்சியப்ப ஞானதேசிக சுவாமிகள் கோவிலூர் சுவாமிகள் ஆண்டவர் பெயரில் ஏற்படுத்திய அறக்கட்டளைச் சொற்பொழிவு. 30.7.2005 அன்று திருவெறும்பூரில் (திருச்சி) ஆவணம் இதழ் 16இன் வெளியீட்டு விழாவில் நிகழ்த்தப் பெற்றது.

பல்லவச் செதுக்குத்தளிகள் ஒன்பதில் தாங்குதளம் பெற்றவை மூன்றே. அவற்றுள் கொற்றவைத் தளியும் அருச்சுனர்தளியும் குடைவரைக் காலத்திலேயே பிறந்துவிட்ட பாதபந்தத் தாங்குதளம் கொண்டன. ஆனால் தர்மராஜரதம் புத்தம் புதிய வடிவமைப்பாய்க் கபோதபந்தத் தாங்குதளம் பெற்றது.

பீமத்தளியும் தர்மராஜரதமும் ஆதிதள அமைப்பு நோக்கில் ஒன்றானவை. இரண்டுமே நாற்றிசைகளிலும் குடைவரை முகப்புகளொத்த திறப்புகள் கொண்டு, சுற்றுவழிச் சூழ்க் கருவறை பெற்றவை. இரண்டிலுமே இச்சுற்றுவழி நிறைவுறவில்லை. ஆதிதளக் கருவறையும் வடிவம் கொள்ளவில்லை. இரண்டுமே நாற்புறத்தும் முகப்புகளையொட்டிப் பக்கச் சுவர்கள் கொண்டவை. இச்சுவரெச்சங்களும் பீமத்தளியில் நிறைவுறவில்லை. பல்நோக்கில் ஒன்றுபடும் இவ்விரு தளிகளின் ஆதிதளங்கள் ஓரமைப்பில் மட்டுமே வேறுபடுகின்றன. தர்மராஜரதத்தின் மேற்கு முகப்பிற்கு முன்னால் மூன்றிலொன்று காட்டப்பட்டுள்ளது. பீமத்தளியின் ஆதிதள அமைப்பில் அது இடம் பெறவில்லை.

தர்மராஜரதத்தின் ஆதிதளப் பக்கச் சுவர்கள் சிற்பம் நிறைக்கும் கோட்டங்கள் பெற்றுத் தளவானூர் சத்ருமல்லேசுவரம், மண்டகப்பட்டு இலக்ஷிதாயதனம் ஆகியவற்றின் முகப்புப் பக்கச் சுவர்களை நினைவூட்டினாலும், மேலமர்ந்துள்ள கர்ணகூடங்களோடு இணைத்துப் பார்க்கும்போது, காஞ்சிபுரம் இராஜசிம்மேசுவரம், திருவதிகை வீரட்டானேசுவரம் போன்றவற்றின் அங்கலாய அமைப்புகள் இவற்றை முன்னோடியாகக் கொண்டு மலர்ந்துள்ளமை நன்குணரப்படும்.

பல்லவச் செதுக்குத் தளிகளுள் விமானம் மட்டும் கொண்டமைந்தது கொற்றவைத்தளி ஒன்றுதான். ஏனைய எட்டனுள் ஆறுதளிகள் விமானத்தின் முன் முகமண்டபம் பெற்றன. தூங்கானைத்தளியும் தர்மராஜரதமும் மட்டுமே விமானத்தில் முன் முன்றில் கொண்டன. இவ்விரண்டின் முன்றில்களுள் பேரளவினதாய் அமைவது தர்மராஜரத முன்றிலே. முன்றில், குடைவரைக் காலத்துச் சிந்தனைதான் என்றாலும், தளவானூர் சத்ருமல்லேசுவரத்தில் கருவறைக்கு முன்நிற்கும் அமைப்பாக உருவான அதை தர்மராஜரதத்தின் முகப்பிற்கு முன்னமைப்பாய்க் கொணர்ந்தது. கட்டமைப்புகளை இடமாற்றம் செய்து கடுமானங்களுக்குப் புதுப் பொலிவூட்டிய பல்லவத் துணிவின் சாதனைத் தடமெனலாம்.

பீமத்தளி, கொற்றவைத்தளி தவிர ஏனைய செதுக்குத் தளிகள் அனைத்துமே இரண்டாம் தளம் கொண்டிருந்த போதும், இத்தள அரமியத்தைச் சுற்றிவந்து கண்டு மகிழ வாய்ப்பான சுற்றுவழி அத்யந்தகாமப் பல்லவேசுவர கிருகமான தர்மராஜரதத்தில் மட்டுமே அமைந்துள்ளது. முதல் தள ஆரத்திற்கும் இரண்டாம் தள அரமியத்திற்கும் இடைப்பட்டு அமைந்திருக்கும் இந்தச் சுற்றுவழி தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் இடம்பெறுவது இதுவே முதல் முறையாகும். இச்சுற்றுவழியால் அரமியம் ஒட்டாது தள்ளி நிற்கும் ஆரமும் அனர்பிதப் பெருமை கொள்கிறது.



இரண்டாம் தள அரமியத்தில் தொடங்கப்பட்டுத் தடைப்பட்டிருக்கும் கருவறை, வடிவம் கொண்டிருந்தால், இரண்டாம் தளத்திலும் கருவறை பெற்ற முதற் கோயிலென்ற பெருமையை இத்தளிக்கு வழங்கியிருக்கும். கருவறைப் புறச்சுவர்களை அரைத்தூண்களால் பகுப்பதும் அப்பகுப்புகளில் சிற்பங்களை அமைப்பதும் குடைவரைக் காலத்திலேயே தொடங்கிவிட்ட பணி. இப்பகுப்புப் பத்திப் பிரிப்பாகிப் பிதுக்க, ஒடுக்க அமைப்புப் பெற்றது அருச்சுனர்தளியில்தான். சுவரமைப்பில் காட்டப்பட்ட இந்த முன்தள்ளல்களும் உள்வாங்கல்களும் தளிக்கு அழகூட்டின. இதற்கேற்பவே தாங்குதளமும் கூரையுறுப்புகளும் பிதுக்க, ஒடுக்க நிலைகளில் காட்டப்பட்டதுடன், ஆரமும் இத்தொடரொழுங்கில் அமைக்கப்பட்டதால், கட்டட அமைப்பில் அழகுணர்வோடு பொருந்திய மாற்றம் ஏற்பட்டது. ஆதிதளச் சுவரிலேற்பட்ட இந்த மாற்றம், தர்மராஜரதத்தின் அரமியச் சுவர்களில் எதிரொலித்திருப்பதை இரசித்து மகிழலாம். அரமியச் சுவர் பத்திப்பிரிப்பு எனும் இக்கலைமுறை தர்மராஜரதத்தில்தான் முதல் முறையாக முயற்சிக்கப்பட்டிருக்கிறது என்பது இத்தளியின் எண்ணற்ற முதல் பெருமைகளுள் ஒன்றாகும்.

ஆதிதள முகப்புக்கு முன்னுள்ள முன்றில் போலவே, இரண்டாம் தளக் கருவறைக்கு முன்பும் விலங்கடித் தூண்களோடு முன்றிலொன்று அமைக்கப்பட்டுள்ளது. வேறெந்தச் செதுக்குத் தளிகளிலோ அல்லது முத்தளம் கொண்டு பின்னாளில் உருவான பல்லவக் கட்டுத்தளிகளிலோ இது போன்ற இரண்டாம் தள முன்றில் இடம்பெறவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் தளத்தின் கிழக்குப் பகுதியில், மூன்றாம் தளம் செல்வதற்காக அமைக்கப்பட்டிருக்கும் இருபுறப் படிவரிசையும் பிடிச்சுவர்களும் அவற்றை உமிழும் மகரங்களும் மேற்படியின் புறத்தமைந்த வளைவுச் சுவரமைப்பும் வேறெந்தப் பல்லவத் தளியிலும் பார்க்கமுடியாத புதுமைகள். அவற்றைத் திட்டமிட்டிருக்கும் பாங்கும் அதற்கேற்ப அரமியத்தின் கிழக்குச் சுவர் கோட்டமேற்றிருக்கும் முறையும் மேற்படியிலிருந்து மூன்றாம் தளத்தினுள் நுழைய வாய்ப்பாக, ஆரச்சுவரை வழிவிட வைத்திருக்கும் நேர்த்தியும் அந்த வழியின் இருபுறத்தும் சுவர்ப் பிளப்புத் தெரியாதவாறு தலைப்போடமைந்த வளைவுகள் காட்டியிருக்கும் நயமும் பல்லவச் சிற்பிகளின் திட்டமிடும் ஆற்றல், செதுக்குத் திறன், கலைநோக்கு ஆகியவற்றின் வெளிப்பாட்டு விளக்கங்களாக ஒளிவீசுகின்றன.

ஆதிதள வலபியை அலங்கரிக்கும் பூதவரி, மேற்கிலுள்ள கோட்டங்களின் மீதும் வட, தென்பக்கங்களிலுள்ள மேற்குக் கோட்டங்கள் மீதும் கணதோரணமாகக் காட்டப்பட்டுள்ளது. பேரறிவாளனுக்குப் பேரளவிலுள்ள மாலையொன்றை கணங்கள் சுமந்துவருமாறு போலக் காட்டப்பட்டுள்ள இத்தோரணம், இராமாநுஜ மண்டப வலபியில்தான் முதல் முறையாக இடம்பெறுகிறது. இதே போன்ற கணதோரணம் தர்மராஜரதத்தின் மூன்றாம் தளக்கருவறை முன்னும் வடிக்கப்பட்டுள்ளது. இம்மூன்று கணதோரணங்களுமே தனித்தன்மை வாய்ந்தவையென்றாலும்,

ஒவ்வொன்றும் மற்றொன்றிலிருந்து ஏதாவதொரு வகையில் வேறுபடுகின்றன. இம்மூன்றனுள் ஆதிதள வலபித் தோரணம் பல சிறப்புகள் பெற்று முதலில் நிற்கிறது.

இராமானுஜ மண்டப கணதோரணமும் தர்மராஜரதத்தின் ஆதிதள கணதோரணமும் வலபியில் அமைந்தவை. ஆனால் தர்மராஜரதத்தின் மூன்றாம் தள கணதோரணம் கபோத முகப்பில் அமைக்கப்பட்டதால், இடம்மாறிய பெருமை கொள்கிறது. இராமானுஜ மண்டபத் தோரணமும் இம்மூன்றாம் தளத் தோரணமும் நுழைவாயில்களுக்கு மேலைந்து வாயில் தோரணங்களாயின. ஆதிதளத்தோரணமோ தளத்தின் வடக்கு, தெற்கு முகங்களில் மேற்குப்பகுதிக் கோட்டங்களின் மேலும், மேற்கில் இருகோட்ட வலபிகளிலும் அமைந்து பக்கத் தோரணங்களாய் மலர்ந்துள்ளது. வாயில் தோரணம் வழக்கமானது. ஆனால் பக்கத் தோரணம் புதுமையானது.

தர்மராஜரதத்தின் மூன்றாம் தளத் தோரணம் ஒரே தொடரொழுங்கில் வடக்கு நோக்கி நகரும் கணங்கள் சுமக்கும் மாலையைக் கொண்டுள்ளது. இராமானுஜ மண்டபத் தோரணம் ஒரே தொடரொழுங்கில், ஆனால் எதிரெதிராய் அமைந்த இரண்டு கணத்தொடர்கள் சுமக்கும் இருமாலைகளுடன் உள்ளது. ஆதிதளத் தோரணமோ ஒரே திசை நோக்கிய தொடரொழுங்குடன் இருதொகுதிகளாகப் பிரித்தமைக்கப்பட்ட கணத்தொடர்கள் சுமக்கும் இரண்டு மாலைகள் பெற்றுள்ளது. இம்மூன்று கணதோரணங்களுள் இராமானுஜ மண்டபத் தோரணம் முகப்பு வாயிலுக்கு மேலமர்ந்து முகப்புத் தோரணமாகியுள்ளது. தர்மராஜரதத்தின் ஆதிதளத் தோரணம் சுற்றுவழியின் முதன்மை வாயிலான மேற்கு வாயிலுக்குப் பக்கத் தோரணங்களாய்ப் பிறந்துள்ளது. இதே தளியின் மூன்றாம் தளத்தோரணம் மட்டுமே கருவறை வாயிலுக்கு மேலமைந்த கணதோரணமாய்க் காட்சி தருகிறது.

இராமானுஜ மண்டபத் தோரணம் வலபி முழுவதற்குமாய் அமைந்துள்ளதால் ஒரே அளவினதாய் அமைந்துள்ளது. தர்மராஜரதத்தின் மூன்றாம் தள கணதோரணமும் கபோத முகப்பு முழுவதற்குமாய் இடம்பெற்றிருப்பதால் ஒரே அளவினதாய் உள்ளது. ஆனால் இத்தளியின் ஆதிதள கணதோரணம், கோட்ட வலபிகளின் மீது மட்டும் இடம் பெற்றிருப்பதால், இதிலுள்ள கணங்கள் முகப்பு வலபி கணங்களின் தொடரொழுங்கு போலவே, முதற் பார்வையில் எந்த வேறுபாடும் உணரமுடியாத அளவிற்கு வடிவமைக்கப்பட்டிருக்கும் நேர்த்தி பல்லவரின் ஒருங்கிணைவுத் திறன் மேன்மைக்கும் கட்டுமான உத்திக்கும் சான்று பகர்வதாய்ச் சுடர்கிறது.

செதுக்குத் தளிகளுள் முத்தளம் பெற்ற ஒரே தளி தர்மராஜரதம்தான். இதன் மூன்றாம் தளமும் சுற்றுவழி பெற்றதாய், மேலே ஆரவரிசையுடன் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் தள அரமியம் போலவே மூன்றாம் தள அரமியமும் பிதுக்கம், ஒடுக்கம் பெற்ற சுவர்களைக் கொண்டுள்ளது. இரண்டாம் தள அரமியச் சுவர்கள் ஒவ்வொன்றும் ஏழு பத்திகளாய்ப் பிரிக்கப்பட்டிருக்க, அளவில் அவற்றினும் சிறியனவான மூன்றாம் தள



அரமியச் சுவர்கள் ஒவ்வொன்றும் ஐந்து பத்திகளாய்ப் பகுக்கப்பட்டுள்ளன. இப்பத்திப் பிரிப்புக் கட்டுமானத்தை எடுப்பாகக் காட்டுவதுடன், எழிலார்ந்ததாகவும் மாற்றியுள்ளது. இடத்திற்கேற்பக் கட்டுமானத்தைத் திட்டமிடுவதும், கட்டுமானத்திற்கேற்பக் கைவண்ணம் காட்டுவதும் எளிதான செயல்களல்ல. ஆனால் பல்லவச் சிற்பாசிரியர்கள் மல்லைக் கடலோரம் முழுவதும் மிக இயல்பாக இவற்றைக் கையாண்டிருப்பது அவர்தம் உள ஆற்றலையும் உளித் திறத்தையும் விளக்குவதாக அமைந்துள்ளது.

மூன்றாம் தளக் கருவறை வாயிலின் மேலும் அதையொட்டிய வல, இடஒடுக்கங்களின் மேலும் காட்டப்பட்டுள்ள கபோதம், ஆதிதள அரமியச் சுவரின் கபோத அமைப்பிலிருந்து முற்றிலும் மாறுபட்டுத் தட்டையான அமைப்புடன் கணதோரணக் களமாகத் திகழ்கிறது. இது போன்ற வடிவமைப்பும் பயன்பாடும் தர்மராஜரதத்திற்கு முற்பட்ட தளிகளிலோ அல்லது அதற்குப் பின்னால் வந்த தளிகளிலோ காணப்பெறாத புதுமைகளாகும். நோக்கிற்கேற்ப மாற்றிய அமைப்புதானென்றாலும் அதன் காரணமாகவே வாயிற் கபோதம் தனிமைப்பட்டுவிடக் கூடாதென்று, அதை அரமியக் கபோதத் தொடரொழுங்குடன் இருபுறத்தும் ஒன்றிணையச் செய்திருக்கும் நேர்த்தி, பல்லவரின் புதுமை அவாவும் போக்கையும் அப்புதிய அமைப்புகளைக் கட்டுமானக் சூழலோடு கரைத்துவிடும் அபாரத் திறத்தையும் வெளிப்படுத்துவதாய் உள்ளது.

ஆதிதள ஆரமாகத் திசைக்கு மூன்று சாலைகளென மேற்குத் தவிர்ந்த முத்திசைகளிலும் ஒன்பது சாலைகள் அமைய, மூலைகளில் கர்ணகூடங்கள். மேற்கில் முன்றிலமைப்பு, கர்ணசாலைகளையும் இடைப்பட்ட உறுப்பாய்ச் சாலையையும் அதன் இருபுறத்தும் பஞ்சரங்களையும் ஆரமாகப் பெற்றுத் தென், வடமூலைக் கூடங்களுடன் தொடரொழுங்கு கொள்கிறது. அவற்றையிணைக்கும் ஆரச்சுவர் இவ்வொழுங்கைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு, இவ்வுறுப்புகளைப் பதக்கம் போலாக்கி ஆரத்தொடரை உண்மையானதோர் ஆரமாகவே மாற்றிவிடுகிறது.

இரண்டாம் தளத்தின் ஆரம், தள அமைப்பிற்கேற்ப மேற்குத் தவிர்ந்த முத்திசைகளிலும் திசைக்கு இரண்டு சாலைகள், மூலைகளில் கூடங்கள் எனக் கொண்டு இணைக்கும் சுவருடன் இயல்பான பதிவாக அமைந்தாலும், மேற்கில் கீழ்த்தளம் போலவே மூன்றில் கூரைமீது இடையில் சாலையும் இருபுறத்தும் கர்ணசாலைகளுமென மாறியமைந்துள்ளது. இங்கும் ஆரச்சுவரின் முன்னோட்டம் வட, தென்மூலைக் கூடங்களுடன் இம்மூன்றில் பதக்கத்தை இணைத்து, இணையற்ற ஆரமாக இரண்டாம் தள ஆரத்தை மாற்றிவிடுகிறது. இத்தகு பதக்க ஆரங்கள் வேறு செதுக்குத் தளிகள் எவற்றிலும் அமையவில்லை என்பதும், இப்பதக்கத்தை அமைக்கக் குடைவரைத் தோன்றலான கர்ணசாலைகளையும் புதிய படைப்பான பஞ்சரங்களையும் பல்லவச் சிற்பாசிரியர்கள் மிகச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்க சிறப்புகளாகும்.

நினைத்த இடத்தில், நினைத்த மாத்திரத்தில் இறைவனுக்கு வடிவம் தந்து இன்பங் கண்டவர் விசாரதருமர். இறைவனுக்குப் பூசனை செய்வதில், இகலோக நடப்புகளை மட்டுமல்ல, சூழலை, தம்மை என எல்லாவற்றையுமே மறந்தவர். அதனால்தான் தந்தை நையப் புடைத்ததுகூடத் தெரியாது சிவதரிசனத்திலிருந்தார். தாம் மணலால் செய்த இலிங்கத்திற்குத் திருமஞ்சனமாட்ட வைத்திருந்த பாலைத் தந்தை எச்சதத்தன் காலால் இடறுவது கண்டபோதுதான் பூசனைக்கு இடையூறு என்று பொறிதட்டியது. என்ன செய்கிறோம் என்பதே தெரியாமல், இடறியவர் கால் மீது அருகிலிருந்த கோலை வீச, அது மழுவாகி எச்சதத்தன் கால்களைத் துணித்து அவரைவீழ்த்தியது. வீழ்த்தியவரைப் பற்றிய கவலையே இல்லாது தடை நீங்கிய மகிழ்வோடு பூசனையில் புகுந்த விசாரதருமரை சிவபெருமான் ஆட்கொண்டார். 'நம் பொருட்டால் ஈன்ற தாதை விழ எறிந்தாய், அடுத்த தாதை இனி உனக்கு நாம்' என்று விசாரதருமரை அரவணைத்த பெருமான், 'அனைத்து நாம் உண்டகலமும் உடுப்பனவும், சூடுவனவும் உனக்காகச் சண்டீசனுமாம் பதம் தந்தோம்' என மகிழ்ந்துரைத்துத் தம் சடையிருந்த கொன்றை மாலையைச் சண்டீசருக்குச் சூட்டிப் பெருமைப்படுத்தினார். சிவபெருமானின் திருமகனாகும் பேறு பெற்ற மானிடர்கள் இருவரே. ஒருவர் சம்பந்தர். மற்றொருவர் விசாரதருமர், சம்பந்தரோ உமையிடம் பால் அருந்தியதால் மகனானார். ஆனால் அறிவிப்பு நிகழவில்லை. விசாரதருமரை சிவபெருமானே தத்தெடுத்தார். உலகறிய அறிவிப்பு நிகழ்ந்தது.

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகக் கருதப்படும் சண்டீசருக்கு, வேறு எந்த நாயன்மாருக்கும் கிடைக்காத பேறுகள் சில வாய்த்தன. முதற்பேறு இறைவனே உலகறிய அறிவித்து மகனாக ஏற்ற பேறு. இரண்டாம் பேறு சண்டீசப் பதம். இறையருள் பெற்ற பலர் கணநாயகங்களாக, வாயிற்காவலர்களாக, இறைவன் ஆடலுக்கே முழவு வாசிப்பவர்களாக அமைந்தனரென்பது உண்மையெனினும், சண்டீசப் பதத்தில் அவை சாதாரணமானவை. இறைவனின் மழுவையே தம் ஆயுதமாகக் கொண்டு சிவன் கோயில்கள்அனைத்திலும் தனித் திருமுன்னில் அமரும்பேறு விசாரதருமருக்கு மட்டுமே வாய்த்தது. 'ஆதிசண்டேசுவர தேவர்' என்று அவர் பெயராலேயே இறைக்கோயில் சொத்துக்கள் வாங்கப்பட்டன; விற்கப்பட்டன. தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளில் பரவலாகவும் உரிமையோடும் இடம்பெறும் திருப்பெயர் சண்டீசருடையதே. சிவமரபைச் சேர்ந்த வேறு யாருக்கும் அந்தப் பேறு வாய்க்கவில்லை. சூடிக்கொடுத்த சுடர்க்கொடி வைணவக் கலாச்சாரத்தில் ஆண்டாள். அதற்கு நேர்மாறாக இறைவன் சூட்டியது மட்டுமல்ல உடுத்ததும் உண்டதும் பெற்ற சுடர்க்கொடி விசாரதருமர். சைவக் கலாச்சாரத்தில் உமையன்னைக்குக் கூட வாய்க்காத பேறு இது.

இத்தகு பெரும்பேறு வாய்க்க விசாரதருமர் செய்ததுதான் என்ன? சைவ மரபில் வந்த அத்தனை அடியவர்களும் சிவபெருமானிடம் இணையற்ற அன்பு பூண்டவர்கள்தான். அவர் பொருட்டுப் பிள்ளையை, மனைவியை எனப் பலவும் இழக்கத் துணிந்தவர்கள்தான். என்றாலும் அவர்களுக்



கெல்லாம் வாய்க்காத சண்டீசப்பதம், 'உன் தந்தை இனி நான்' எனும் அறிவிப்பு விசாரதருமருக்கு மட்டும் வழங்கப்பட்டது ஏன்? காரணம் இல்லாமல் கண்ணுதலார் ஏதும் செய்வதில்லை. விசாரதருமர் தனிமைப் படுத்தப்பட்டுத் தூய அன்புடன் அரவணைக்கப்பட்டு இறை நிலைக்கு உயர்த்தப்பட்டமைக்கு உயரியதோர் காரணம் இருக்கத்தான் செய்தது. அவர் தவிர்த்த அடியவர்கள் அத்தனைபேரும் இறைவனை அவர் இருந்த இடம் தேடிச் சென்று வழிபட்டனர். அவர் ஒருவரே தாம் இருந்த இடத்தில் இறைவனை உருவாக்கிக் கொண்டு வழிபட்டார். நினைத்த இடத்தில், நினைத்தபொழுது இறைவனைப் பிறப்பிக்கும் தாயாக இருந்த அவரை, தாம் உருவாக்கிய வடிவிற்குத் தீங்கிழைக்கத் துணிந்தாரை நொடி நேரத் தயக்கமும் இன்றித் தண்டித்த அவர் துணிவை இறைவன் பெரிதும் இரசித்திருக்க வேண்டும். அதனால்தான் பிறப்பிலியான தம்மையே பிறப்பித்துக் கொண்டிருந்த அந்தப் பேரன்பரின் படைப்பாற்றலிலும் துணிவிலும் சிந்தையிழந்தவராய், அவரை மகனாக ஏற்றுச் சண்டீசப் பதமளித்தார்.

தம்மை நேரடியாக எதிர்த்தவர்களை அடக்கித் தம்மிடமே வைத்துக் கொண்ட சிவபெருமான் தம்மைச் சார்ந்தவர்களுக்குத் துன்பம் தந்தவர்களை அடக்கி ஒடுக்கி அகற்றினார். இந்த இரண்டு வகை ஒடுக்கல்களுமே சிற்பங்களாயின என்றாலும் குடைவரைகளில் கிடைப்பவை முதல் வகையினவே. சிராப்பள்ளி இலளிதாங்குர பல்லவேசுவர கிருகத்தில் பாம்பாபரணராய், முயலகன் தலைமீது கால் வைத்து நிற்கும் கங்காதரர், தாருகாவனத் தாக்குதல்களை முறியடித்த கோலத்தினர். சோமாஸ்கந்தராய் அமர்ந்தவிடத்தும் முயலகன் தாள் தாங்கியாய்த் தொடர்கிறார். இந்தப் பேறு சிவச்சார்புடையவர்களை எதிர்த்தார்க்குக்கிடைக்கவில்லை. அவர்கள் வதைபடும் கோலத்தில் மட்டுமே வடிக்கப்பட்டார்கள். இத்தகு வதைக்கோல மூர்த்தங்கள் தமிழ்நாட்டுக் கலை வரலாற்றில் முதன்முதலாக இடம்பெறும் இடம் அத்யந்தகாமம்தான். காலனும் ஜலந்தரனும் அந்தப்பேற்றைப் பெற்றார்கள்.

விஷ்ணுவுடன் தொடர்புடைய மூன்று சிற்பங்கள் இரண்டாம் தள அரமியச் சுவர்க் கோட்டங்களில் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் விஷ்ணு கருடனுடன் காட்சிதரும் கோலம் அரமிய வடமுகத்திலும் காளிங்கமர்த்தனம், தனிவிஷ்ணு ஆகிய சிற்பங்கள் அரமியத் தென்முகத்திலும் இடம்பெற்றுள்ளன.

அத்யந்தகாமத்தின் நாற்பத்தொன்பது சிற்பங்களுள் அழிக்கும் நோக்கில் அமைந்தவை மூன்றுதான். அந்த மூன்றுமே இரண்டாம் தளத்தில், ஒன்று வடமுகத்திலும் இரண்டு தென்முகத்திலுமென இடம் பெற்றள்ளன. இம்மூன்று சிற்பப் படைப்புகளுமே, தவறுகள் தண்டிக்கப்படும், தீமைகள் அழிக்கப்படும் என்பதை வெளிப்படுத்துவதற்காக விளைந்தவைதான் என்றாலும், அழிக்கும் முறையிலும், அழிக்கப் பயன்படுத்திய கருவிகளிலும், அழித்தவர் உணர்வுகளிலும்தான் எத்தனை வேறுபாடுகள்! காலாரியில் உதைத்தழிப்பு, ஜலந்தர சம்ஹாரத்தில் பிளந்தழிப்பு, காளிங்கமர்த்தனத்தில் முறுக்கியழிப்பு.

### சிற்பச் சிறப்புகள்

பல்லவர்களின் சிற்பத்திறம் குடைவரைக் கோயில்களின் தொடக்கக் காலத்திலேயே வீறுடன் வெளிப்படத் தொடங்கியதாகக் கூறலாம்.முதலாம் மகேந்திரவர்மர் கால கங்காதரமூர்த்தியும் புஜங்கத்ராசிதரும் அமலைக் கூத்தர்களும் பல்லவச் சிற்பாசிரியர்களின் செதுக்காற்றலில் விளைந்த செம்மாந்த சிற்பங்களாகும். குடைவரைக் கோயில்களின் இரண்டாம் பருவம் கட்டமைப்பு, சிற்பம் ஆகிய இரு துறைகளிலும் வியத்தகு முன்னேற்றம் காட்டி வளர்ந்தது. மகிடாசுரமர்த்தனி சிற்பத்தொகுதியும் மகாவராக பரமேசுவர விஷ்ணு கிருகக் கொற்றவைத் தொகுதியும் கலையாற்றலின் கலங்கரை விளக்கங்கள்.

முன்னோக்கி வளர்ந்த கலைநோக்கு, மேல்நோக்கிப் பார்த்தபோது விமானங்கள் பிறந்தன. ஒற்றைக்கல் தளிகளெனவும் செதுக்குத் தளிகளென வும் அழைக்கப்படும் மல்லை ரதங்களைப் பல்லவர்கள் தோற்றுவித்த முதல் ஒன்பது விமானங்களாகக் கொள்ளலாம். இவையனைத்துமே கட்டமைப் போடு ஒன்றிய சிற்பங்களைப் பெற்றவைதான் என்றாலும். இப்பருவச் சிற்பக்கலைத்திறம் முழுவீச்சோடு மலர்ந்திருப்பது அருச்சுனர் ரதத்திலும் தர்மராஜா ரதமான அத்யந்தகாமத்திலும் மட்டும்தான்.

அருச்சுனர் ரதத்தோடு ஒப்பிடும்போது அத்யந்தகாமம் சிற்பங்களின் சொர்க்கம். மூன்று தளங்களிலுமாய் ஐம்பத்தொன்பது சிற்பங்கள் திட்டமிடப்பட்டு ஐம்பத்தெட்டுச் சிற்பங்கள் உருவாகியுள்ள உன்னதக் கலைக்களம். மேற்றளக் கருவறைத் தொகுதியையும் உருவாக்கத்தோடு ஒன்றியிருக்கும் கணவரிகள், வியாழவரிகள் கந்தர்வத் தலைகள், விலங்குருவங்கள், மகரங்கள், நிதிக்கணங்களையும் நீக்கிய மேற்கணக்கு, தமிழ்நாட்டின் வேறெந்தச் செதுக்குத்தளியும்பெறாத பேறாகும். தளத்திற்கேற்ப உயரம் கொண்ட கோட்டம், அந்தக் கோட்டத்திற்கென்றே திட்டமிடப்பட்ட சிற்பம் அல்லது சிற்பங்கள், இதுதான் அத்யந்தகாம உருவாக்கச் சிறப்பின் அடிப்படைத் தத்துவம்.

முகப்பிற்கேற்ற உயரத்துடன் அகழப்பட்டிருக்கும் ஆதிதளத்தின் எட்டுக் கோட்டங்களில் ஏழில் இறைவடிவங்கள். இவற்றுள் ஐந்து, தனிக் கடவுளரையும் இரண்டு, ஒன்றாயிணைந்த கடவுளரையும் காட்டுகின்றன. ஒன்றாயிணைந்தவர்களுள் ஹரிஹரர், குடைவரைக் காலச் சிந்தனையாக மகாவராகர் மண்டபத்தின் கருவறைச் சுவரில் இடம்பெற்றுள்ளார். ஆனால் அம்மையப்பர், அத்யந்தகாமம் படிம இயலுக்கு வழங்கிய புதிய பரிசு. பல்லவக் குடைவரைகளிலோ, பிற செதுக்குத் தளிகளிலோ இடம் பெறாத இவ்வடிவம், அவர்தம் கட்டுத் தளிகளிலும் மிக அரிதாவே காணப்படுகிறது. ஆதிதளத்தில் எஞ்சியிருக்கும் எட்டாவது சிற்பம் பல்லவ அரசர் ஒருவரைப் படம் பிடிக்கிறது.

இரண்டாம் தளத்திலுள்ள இருபத்திரண்டு கோட்டங்களுக்கும் இருபத்திரண்டு சிற்பங்கள் திட்டமிடப்பட்டு, இருபத்தொரு சிற்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தள அரமியத்தின் மேற்கில் கருவறையின்



தென்புறத்தமைய வேண்டிய காலவர் மட்டுமே வடிவம் பெறவில்லை. அரமியத்தின் வடக்கிலும் தெற்கிலும் திசைக்கு ஏழு சிற்பங்களாகப் பதினான்கும், கிழக்கில் நான்கும், மேற்கில் மூன்றுமாக அமைக்கப்பட்டுள்ள இவ்விருபத்தொரு சிற்பங்களுள் சிவபெருமானைக் குறிப்பவை பன்னிரண்டு. மூன்று சிற்பங்கள் விஷ்ணுவையும் ஐந்து சிற்பங்கள் கோயிற் பணியாளர்களையும் ஒரு சிற்பம் வாயிற் காவலரையும் வடிவாய்க் கொண்டு அமைந்துள்ளன.

பன்னிரண்டு சிவச் சிற்பங்களுள், சிவபெருமான் தனித்தமைந்த சிற்பங்கள் நான்கு, சிவபெருமான் இன்னொருவருடன் அல்லது இன்னொன்றுடன் இணைந்தமைந்த எட்டுச் சிற்பங்களுள் இரண்டு அவரது அழிக்கும் ஆற்றலைக் காட்டுவன. ஒன்று, அவரது தாங்கும் பேராற்றலுக்கு எடுத்துக்காட்டாய் விளைந்தது. ஏனைய ஐந்தனுள் இரண்டு கலையோடு தொடர்புடையவை. இரண்டு அனுக்கிரக மூர்த்திகள்.ஒன்று மிருகவாஞ்சை வெளிப்படுத்தும் நந்தியணுக்கர். இப்பன்னிரண்டு சிற்பங்களுள் கங்காதரர் தவிர ஏனைய பதினொன்றும் படிமக்கலை வரலாற்றில் முதல் தோற்றம் காட்டும் இடம்அத்யந்தகாமம்தான். கங்காதரரும் முன்தோன்றிய நிலைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டு வேறுவிதமாய் கங்கையேற்கும் கோலத்தில் வடிக்கப்பட்டிருப்பது இத்தளியமைத்த சிற்பிகளின் தனித்தன்மை காட்டுகிறது.

சிவபெருமான், தண்டு முனிவர் இணைந்துள்ள சிற்பத்தோற்றம் பரதரின் நாட்டிய சாத்திர வரலாற்றை விளக்கும் முகத்தான் விளைந்துள்ளது. தாம் இயற்றிய நாடகத்தை பரதர் நடித்துக் காட்டியதும், சிவபெருமான் திருமுன் அதை நிகழ்த்தி அவர் கருத்துப்பெற விழைந்த நான்முகன், அதற்கு ஏற்பாடு செய்தார். நாடகம் நிகழ்ந்தது. கண்டு மகிழ்ந்த சிவபெருமான், தாம் ஆடும் பூர்வரங்கத்தை உடன் இணைத்துக் கொண்டால் சிறக்குமென்று கூறி, கரணங்களைப் பரதருக்குச் கற்றுத்தருமாறு தண்டுவிற்கு உத்தரவிட்டார். இறைவன் ஆணைப்படியே, இறைவன் ஆடத் தாம் கண்டு கற்றறிந்த கரணங்களைத் தண்டு பரதருக்குக் கற்பித்தார். இந்த இனிய வரலாறு தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் சிற்பக்காட்சிகளாக இடம் பெற்றுள்ளது. இறைவன் மகிழ்ந்தாடும் கரணக்கோலங்கள் தஞ்சாவூர் இராஜராஜீசுவரத் திலும், அக்கரணங்களைக் கற்றுத் தண்டு இறைவனுக்கு ஆடிக்காட்டுவது மாமல்லபுரம் அத்யந்தகாமத்திலும், இறைவன் ஆணையேற்று பரதருக்குத் தண்டு கரணங்களைக் கற்பிக்கும் காட்சி கும்பகோணம் சார்ங்கபாணி கோயிலிலும் சிற்பக் காட்சிகளாய்ச் சிறக்க வடிக்கப் பெற்றுள்ளன.

அனுக்கிர மூர்த்திகளுள் சண்டேசுவர அனுக்கிரக மூர்த்தி மிகச் சிறந்த சிற்பமாகும். நின்ற கோலத்தில் ஆண்டவனும் அடியவனும் தனித்துக் காணப்படும் அனுக்கிரகக் கோலம் தமிழ்நாட்டிலேயே இது ஒன்றுதான் என்று துணியலாம். சண்டேசுவரரைத் தோழமையோடு அணைத்தபடி அன்பு கமழ சிவபெருமான் உற்றுநோக்குவதும் பயபக்தியுடன் பணிந்து குனிந்து சண்டேசுவரர் அடக்கமாய்ப் பத்திமைப் பணிவு காட்டுவதும் வேறெந்தச் சிற்பத் தொகுதியிலும் காணமுடியாத சிறப்புகளாகும்.

ஒருக்களித்த நிலையிலும் ஒன்று சமபாத நிலையிலும், ஒன்று ஒற்றைக்கால் தவத்திலும் காணப்படுகின்றன. நடுத்தளத்தில் நான்கு சிற்பங்களும் மேற்றளத்தில் ஒரு சிற்பமும் கால்களைக் குறுக்கீடு செய்து ஸ்வஸ்திகம் காட்டுகின்றன. இவற்றுள் நடுத்தள நான்கும் சிவபெருமானின் திருத்தோற்றங்களாக அமைந்துள்ளன. மேற்றளச் சிற்பம் கருவறையின் வடபுறக் காவலர் வைஷ்ணவத்தில் ஒன்றும் ஊர்த்வஜாநுவில் இரண்டும் பார்சுவஜாநுவில் ஒன்றுமாக நான்கு சிற்பங்களை நடுத்தளத்தில் காணமுடிகிறது.

பாதநிலைகளில் திரயச்ரம் பெருமளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. நடுத்தள, மேற்றளச் சிற்பங்களில் பரவிக் காணப்படும் இப்பாதநிலை கீழ்த்தளச் சிற்பங்களில் ஒன்றில்கூட இடம்பெறவில்லை. அடுத்து அதிக அளவில் இருப்பது சமபாதம். பதினொரு சிற்பங்கள் இப்பாதநிலை கொண்டுள்ளன. அக்ரதலசஞ்சாரப் பாதம் நடுத்தளச் சிற்பங்களில் காணப்படுகிறது. மேற்றளத்தில் வாயிற் காவலர் மட்டுமே இப்பாதநிலை கொண்டுள்ளார்.

நடுத்தள, மேற்றளச் சிற்பங்களுள் பெரும்பான்மையன முகத்தைச் சற்றுக் கீழ்த் தாழ்த்திய நிலையில் காட்டப்பட்டுள்ளன. எஞ்சியவற்றுள் இரண்டு மேல்நோக்கிய நிலையிலும் பிற நேர்நோக்கிய நிலையிலும் உள்ளன.

அத்யந்தகாமச் சிற்பஙகளின் தலையலங்கார அமைப்புகளுள் சடைமகுடமே மிகுதியாக உள்ளது. இச்சடைமகுடமும் பல்வேறு விதமாய் அமைக்கப்பெற்றுள்ளது. மொத்தமாய் முடியப்பட்டு மகுடமாய் அமைந்த நிலையும், நன்கு சீவிப் புரிகளாய்த் திரித்து அவற்றை இணையக்கட்டிய நிலையும், தலைப்பாகை போல வட்டச் சுருட்டலாய்த் தலைநிறைத்து அமர்ந்த நிலையும் அடிப்படை அமைப்புகளாக, இவை ஒவ்வொன்றிலும் சிறுசிறு மாற்றங்கள் செய்து சடைமகுடத் தலையலங்காரங்களைக் கண்கவரும் விதங்களில் காட்டியுள்ளனர் பல்லவச் சிற்பிகள். பெரும்பாலான சடைமகுடங்கள் முகப்பணிகள் பெற்றுள்ளன.

கீழ்த்தளத்தில் சடைமகுடத்துடன் காணப்படும் மூன்று சிற்பங்களுள் சிவபெருமானுடையவை இரண்டு. இதே தளத்தில் உடலின் ஒரு பாதியை அம்மைக்கும் ஹரிக்கும் தந்து அம்மையப்பராகவும் ஹரிஹரராகவும் நிற்கும் சிவபெருமானும் தம்முடைய கலப்புடலுக்கான கலப்பு மகுடத்தின் வலப்பாதியைச் சடைமகுடமாகவே கொண்டுள்ளார். வடமேற்குக் கோட்ட நான்முகனும் சடைமகுடரே, நடுத்தளத்தில் சடைமகுடமணிந்துள்ள பத்துச் சிற்பங்களும் சிவபெருமானின் பல்வேறு திருத்தோற்றங்களாகவே அமைந்துள்ளன. மேற்றள அடியவர்களுள் அறுவர் சடைமகுடம் கொண்டுள்ளனர்.

சடைமகுட சிவபெருமானின் திருத்தோற்றங்களில் எட்டுப் பிறையும், நான்கு மண்டையோடும் பெற்றுள்ளன. இரண்டையும் பெற்ற திருத்தோற்றங்கள் கங்காளமூர்த்தியும் ஜலந்தரவத மூர்த்தியுமாகும். கட்டிய சடைமகுடத்தின் சில புரிகள் பக்கவாட்டில் விரிசடை போலப் பரவியிருக்கும்



நிலை சிவபெருமானின் இரண்டு வதத் தோற்றங்களில் மட்டுமே காணப்படுவதும் பின்னாளில் இவ்விரிசடை, சிவபெருமானின் ஆனந்தத் தாண்டவத்திற்கான தலையலங்காரமாகக் கொள்ளப்பட்டமையும் இங்கு நினைவுகூரத்தக்கன.

தலையின் இருபுறத்தும் அடர்த்தியாகவும் அழுத்தமாகவும் தொங்கியமையும் தலைக்கோலமான சடைபாரம், கீழ்த்தளத்திலும் மேற்றளத்திலும் தளத்திற்கொரு - சிவபெருமானுக்கு அமைந்துள்ளது. நடுத்தளத்தில் தென்முக வீணாதரரும் நந்தி சிவாவும் சடைபாரத் தலைக்கோலம் கொண்டுள்ளனர். இதே தளத்திலுள்ள இயமனும் பூதகணமும் சற்று அடர்த்திக் குறைவான, அகலம் குறைவான சடைபாரத்தில் காட்சிதருகின்றனர்.

கிரீட மகுடம் கீழ்த்தளத்தில் அரசருக்கும் நடுத்தளத்தில் வடக்கிலும் தெற்கிலுமிருக்கும் விஷ்ணு பெருமானுக்கும் ஜலந்தரனுக்கும் காட்டப்பட்டுள்ளது. கீழ்த்தளத்தில் இடம்பெறாத கரண்ட மகுடம், நடுத்தளத்தில் கிருஷ்ணன், கருடன், நந்தி, காளிங்கன் ஆகியோர் தலையை அலங்கரிக்கிறது. மேற்றளத்து அடியவர்களுள் ஏழுபேருக்கும் அதே தளத்திலுள்ள சந்திரனுக்கும் சூரியனுக்கும் வட வாயிற்காவலருக்கும் கரண்ட மகுடம் காட்டப்பட்டுள்ளது. சடைமகுடத்திற்கு அடுத்தாற் போல் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டுள்ள தலைக்கோலமாகக் கரண்ட மகுடத்தைக் கொள்ளலாம்.

அம்மையப்பர், ஹரிஹரர் தலைக்கோலங்கள் மட்டுமே கலப்புருவாக்கங்களாக அமைந்துள்ளன. அம்மையப்பர் தலைக்கோலம் சிவப்பாதியில் சடைமகுடமாகவும் உமைப்பாதியில் கரண்ட மகுடமாகவும் அமைய, ஹரிஹரர் தலைக்கோலம் அரன் பகுதியில் சடை மகுடமாகவும் ஹரிப் பகுதியில் கிரீட மகுடமாகவும் உள்ளது. எளிய தலைக்கோலமான தமிழம் தண்டுவிற்குத் தரப்பட்டுள்ளது. மகுடமேதும் அற்றவர்களாய்க் காட்சிதரும் தளிப்பரிவாரத்தாரில் மூவர் உச்சிக் குடுமியராய் அமைய, ஒருவர், இன்னாளைய 'கிராப்பு' போன்ற தலையலங்காரம் கொண்டுள்ளார். தளிப்பெண்ணின் தலையலங்கார அமைப்பை இன்ன அமைப்பென வரையறுக்கக் கூடவில்லை. அது போலவே நடுத்தளத்தில் இருவரும் (சண்டேசுவரர், வாயிற்காவலர்), மேற்றளத்தில் தென்புறக் காவலரும் பெற்றுள்ள தலைக்கோலங்களையும் இன்னதென அறுதியிட்டுச் சொல்லக்கூடவில்லை.

அத்யந்தகாமச் சிற்பங்களுள், சூரியனும் சந்திரனும் மட்டுமே சன்னவீரம் அணிந்துள்ளனர். சந்திரன் சன்னவீரம் இருபுறத்தும் கைகளின் மீதேறிப் பின் செல்ல, சூரியனின் சன்னவீரம் உபவீத முறையில் அமைந்துள்ளது. இவர்கள் இருவர் தவிர எஞ்சியுள்ள சிற்பங்களில் ஒன்பதிற்கு முப்புரிநூல் இல்லை. கீழ்த்தளத்தில் அம்மையப்பரும் நடுத்தளத்தில் கங்கை, பாணர், தளிப்பெண், பூதம், நந்தி, காளிங்கன் தென்கிழக்கு, தென்மேற்கு சிவபெருமான் தோற்றங்கள் முப்புரிநூல் கொள்ளவில்லை. மேற்றளத்தில் முப்புரிநூல் இல்லாத சிற்பமே இல்லை.

இயமனை அழிக்கச் சிவபெருமானுக்குக் காலே கருவியானது. ஜலந்தரனுக்குச் சக்கரம் தேவைப்பட்டது. காளிங்கனுக்கோ, கண்ணனின் கை, கால்கள் இரண்டுமே வேண்டியிருந்தன. இயமனை அழித்தபோது காலுதை போதாதென்று, சூசிக்கை நீட்டினார் சிவபெருமான். சூசி தர்ஜனியாய்ப் பொருள் காட்டும் இடம் அது. இயமனைச் சுட்டுவதால் பிறருக்கு எச்சரிக்கை. பொதுவாக ஆயுதமேந்தாத வலமுன்கையில் மழு வேறு, கட்டிவைத்த சடைமகுடத்தின் வலப்புறம் கட்டு மீறிப் பறக்கும் சடைப்புரிகள் இறைவனின் வேகத்தையும் கோபத்தையும் விளக்குகின்றன. கோபத்தின் உச்சியென்பார்களே அந்த வெளிப்பாடுதான் சிவத்திருமுகத்தில்.

ஜலந்தரவதத்தில் வேகமிருந்தாலும் சினம் சிகர வெளிப்பாடாய் இல்லை. அடங்கிய கோபத்துடன் இராஜதந்திர நோக்கு. வேகத்தைச் சடைமகுடத்தை மீறிய இடப்புறச் சடைப்புரிகள் விளக்குகின்றன. இடக்கையில் சூலமிருந்த போதும் எதிரிக்கேற்ற ஆயுதமெனத் தோளுக்காய்க் குறிப்பார்க்கும் சக்கரம். இயமனை அழிக்கும்போது வேறு கருவிகளுக்குத் தேவையில்லாமையின் பின்கைகள் வெறுங்கைகளாயின. ஆனால் பிறன்மனை விழைந்த ஜலந்தரன் வஞ்சனையாளன். அவனையழிக்கப் பூரண போர்க்கோலம் தேவைப்பட்டது. அதனால்தான் நான்கு கைகளிலும் ஆயுதங்கள். மழு, பாஸப, திரிசூலம், சக்கரம் எனப்படைக்கருவிகளின் புடைசூழத் தோற்றந்தரும் அத்யந்தகாமத்தின் ஒரே சிவபெருமான் இவர்தான்.

காலால் மிதித்துக் கைகளால் முறுக்கிக் காளிங்கப் பாம்பின் ஆணவ மழிக்கும் கண்ணனிடமும் கோபம் உள்ளது. ஆனால் அந்தக் கோபத்தை வெளிப்படுத்தும் முகத்தில் இளமைக்கே உரிய துள்ளலும், விளையாட்டுத் தனமும் இழையோடுகின்றன. ஒரே உணர்வை சிகரத்திலேற்றியும் இராஜதந்திரத்தில் நீறுபூத்த நெருப்பாக்கியும், இளமைத் துள்ளலோடு கூடிய விளையாட்டுப் போலவும் மூன்று முற்றிலும் வேறுபட்ட வெளிப்பாடுகளாய்க் காட்டியிருக்கும் நுட்பம் பல்லவச் சிற்பிகளுக்கே உரிய கலைத்திறம் எனலாம்.

உதைபட்ட இயமனும், முறுக்குண்ட காளிங்கனும் எதிர்த்தவரின் ஆற்றல் அறிந்தவர்களாய்ப் போதுமிந்தத் துன்பம் எனுமாறு போல ஒருவர் கையுர்த்தியும், மற்றொருவர் அண்ணாந்து நோக்கியும் வேதனை வெளிப்படுத்த, சரிந்து வீழ்ந்தமர்ந்தபோதும், 'நம்மை யார் என்ன செய்துவிட முடியும்?' என்று, பெற்ற வரங்களின் துணிவு சூழச் சக்கர பயமின்றிப் பார்க்கிறார் ஜலந்தரன். உதைக்கப்பட்டு வீழ்ந்ததால் நிலைகுலைந்து இயமனும், உடல் முறுக்கப்பட்டுத் தோள் அழுத்தப்படுவதால் துவண்ட நிலையில் காளிங்கனும் கிடக்க, எதிர்வரவிருப்பது புரியாதவராய், சக்கரத்துக்கு வாகாய்த் தோளிருப்பதும் தெரியாதவராய்க் குழப்பஞ் சூழ அமர்ந்திருக்கிறார் ஜலந்தரன். அழிப்பவர், அழிபடுபவர், அழிக்குமுணர்வு என இம்மூன்றின் முத்தாய்ப்பாய் விளைந்திருக்கும் வதமூர்த்திகள் மூன்றும் அத்யந்தகாமத்தின் சிற்பப் புதையல்கள்.



இரண்டாம் தளச் சிற்பங்களில் கடவுளர் அல்லாத வடிவங்கள் ஆறு. அவற்றுள் ஒன்று கருவறை வாயிலின் தென்புறக் காவலர். வடபுறக் காவலர் உருவாகாத நிலையில் தென்புறத்தார் தனியராக நிற்கிறார். எஞ்சிய ஐந்து சிற்பங்களுள் நான்கு அரமியத்தின் கிழக்கு முகக் கோட்டங்களிலும் ஒன்று மேற்கு முகத்தென்கோடிக் கோட்டத்திலும் இடம்பெற்றுள்ளன. இவை ஐந்துமே தளியுடன் தொடர்புடைய தளிப்பரிவாரத்தைச் சுட்டுவனவாய் அமைந்துள்ளன. கிழக்கிலுள்ள நான்கு சிற்பங்களுள் வடகோடியிலுள்ள பாணர் சிற்பம் மட்டுமே முழுமையான அளவில் வடிக்கப்பட்டுள்ளது. தென்கோடி சிவாச்சாரியார் பெருமளவிற்கு முழுமை பெற்றிருந்தபோதும், இடப்பாதமும் அதற்கு மேலுள்ள கணுக்கால் பகுதியும் உருப்பெறாத நிலையிலுள்ளார். பாணருக்கு வலப்புறத்துள்ள பரிசாரகர் முக்காலளவும், சிவச்சாரியாருக்கு இடப்புறத்திலுள்ள மணியடிப்பவர் இடுப்பளவுமாய் இடத்திற்கேற்ப உருவாகியுள்ளனர். மேற்குமுகத் தென்கோடிக் கோட்டத்தில் தளிப்பெண். தமிழ்நாட்டின் வேறெந்தத் திருக்கோயிலிலும் தளிப்பரிவாரம் கல்வெட்டளவில் இடம் பெற்றிருக்கிறதே தவிர சிற்பக் காட்சியாய்க் காட்டப்படவில்லை. தளிப்பரிவாரத்தைத் தளிச்சுவர்ச் சிற்பங்களாகவே பெறும் பேறு, தமிழ்நாட்டில் அத்யந்தகாமத்திற்கு மட்டுமே வாய்த்த பெரும்பேறு எனலாம்.

மூன்றாம்தள அரமியச் சுவர்களில் இடம்பெற்றிருக்கும் பத்தொன்பது சிற்பங்களுள் இருவர் வாயிற்காவலர். மூன்று தெய்வச் சிற்பங்கள். எஞ்சிய பதினான்கும் அடியவர்களின் தோற்றங்களாகவே உள்ளன. இத்தனை அடியவர்கள் தளிச்சூழ எழுந்தருளியிருக்கும் காட்சியும் தமிழ்நாட்டில் வேறெந்தப் பழங்கோயிலும் காணக்கிடைப்பதில்லை.

முதல்தளக் கருவறை தொடங்காப் பணியாய் நிற்கிறது. இரண்டாம் தளக்கருவறை தொடராப் பணியாய் முடிந்தது. மூன்றாம் தளக் கருவறை முற்றாப்பணியென்றாலும் முழுமுதலைக் கொண்டுள்ளது. குடைவரைக் காலத்திலேயே கருவறைத் தெய்வமாகிவிட்ட சோமாஸ்கந்தரே, அத்யந்தகாமத்து மேற்றளக் கருவறையிலும் இடம்பெற்றுள்ளார். இத்தொகுதியின் தனித்துவங்களுள் தலையாயவை இறைவியைப் பார்ப்பது போல் இறைவனின் முகம் இடப்புறம் திரும்பியிருப்பதும், இறைவி இறைவனுக்காய் முழுவதும் ஒருக்களித்து அமர்ந்திருப்பதும்தான்.

### சிற்பங்கள் - பொதுக்கூறுகள்

அத்யந்தகாமத்தில் இடம் பெற்றுள்ள நந்தி தவிர்த்த அறுபத்தாறு சிற்பங்களுள் (தளச் சிற்பங்கள் 48 + நடுத்தள உடன்கூட்டம் 9 + மேற்றள நிதி கணங்கள் 2 + கருவறைத் தொகுதி 7) நான்கு மட்டுமே பெண் வடிவங்கள். ஏனைய அறுபத்திரண்டுள் பாதி ஆண், பாதி பெண்ணாக நிற்கும் அம்மையப்பர் வடிவம் தவிர்ந்த எஞ்சிய அறுபத்தொன்றும் ஆண்களைச் சித்தரிக்கும் சிற்பங்களாகவே அமைந்துள்ள இத்தளியின் முத்தளச் சிற்பங்களுள் முதல் தளச் சிற்பங்கள் எட்டும் சமபாத நிலையில் காட்டப்பட்டுள்ளன. நடுத்தளச் சிற்பங்கள் முப்பதில் இருபத்தொன்பது

இவர்களுள் ஹரிஹரர் மற்றொரு செவியில் மகர குண்டலம் பெய்துள்ளார். உறுதியாக அடையாளப்படுத்தும் நிலையில் உள்ள ஒரே மகர குண்டலமாக இதைக் கொள்ளலாம்.

செவிப்பூக்கள் காதுமடலில் அணியப்படும் காதணியாகும். கீழ்த்தளத்தில் நான்கு சிற்பங்களில் காணப்பெறும் இவ்வணி, நடுத்தளச் சிற்பங்கள் ஆறிலும் மேற்றளச் சிற்பங்கள் ஐந்திலும் இடம் பெற்றுள்ளது. நடுத்தளச் சிற்பங்களில் இவை ஒரு செவியில் மட்டுமே காணப்படுகின்றன. மேற்றளத்தில் மட்டுமே இரு செவிகளிலும் செவிப்பூக்கள் கொண்ட மூன்று சிற்பங்களைப் பார்க்கமுடிகிறது. இங்குள்ள எஞ்சிய இரண்டும் ஒரு செவியில் பூவணிந்துள்ளன. இச்செவிப்பூக்கள் பெண் சிற்பங்களில் இடம் பெறாமை குறிப்பிடத்தக்கது.

இன்னதென அடையாளப்படுத்த முடியாத குண்டலங்கள் கீழ்த்தளத்தின் மேற்கு முகத் தெற்கு சிவபெருமானின் செவிகளிலும் பல்லவ அரசரின் செவிகளிலும் நடுத்தள சிவாச்சாரியார் செவிகளிலும் இடம் பெற்றுள்ளன. அணிகலன்கள் ஏதுமற்ற வெறுஞ் செவியர்களாய் நடுத்தளத்தில் பாணர், மணியர், தண்டு ஆகிய மூவரும் மேற்றளத்தில் அடியவர்கள் மூவரும் உள்ளனர்.

அத்யந்தகாமச் சிற்பங்களுக்குக் காட்டப்பட்டுள்ள ஆடைகள் கோவண ஆடை, தோலாடை, மரவுரியாடை, சிற்றாடை, பாவாடை, கச்சம் வைத்துக் கட்டிய பட்டாடை, இடைக்கட்டுகள் எனப் பல்வகைப்பட்டன. இவற்றுள் கோவண ஆடை இருபத்தொரு சிற்பங்களின் இடையாடையாக அமைந்துள்ளது.

தோலாடை ஒரு தொடைப்பகுதியில் அகலமாகவும் மறுதொடைப் பகுதியில் குறுகலாகவும் இருக்குமாறு, தொடைகளை அரவணைத்தபடி கட்டப்பெற்று, முனைகள் இடுப்பில் செருகப்பட்ட நிலையில் அணியப்பட்டு உள்ளது. கீழ்த்தள சிவபெருமான் ஒருவரும் மேற்றள சிவபெருமானும் இத்தோலாடையை விரும்பி அணிந்துள்ளனர். நடுத்தளத்தில் கங்காளர், வீணாதரர், நாட்டிய ஆசிரிய சிவா, சண்டேசுவர அனுக்கிரகமூர்த்தி ஆகியோருக்குத் தோலாடை காட்டப்பட்டுள்ளது. சிவபெருமான் தவிர வேறெந்தச் சிற்பத்திற்கும் தோலாடை காட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கோவணஆடை போலன்றி இடையைச் சுற்றித் தழுவிய நிலையில் அணியப் பெற்றுள்ள சிற்றாடை பதினொரு சிற்பங்களில் காணப்படுகிறது. தொடையை இறுகப்பிடித்தபடி அமையும்மரவுரியாடை காலாரிமூர்த்தி சிற்பத்தில் மட்டுமே காணப்படுகிறது. பாவாடை போன்ற விரிவான இடுப்பாடை கீழ்த்தளத்து சிவபெருமான் திருத்தோற்றம் ஒன்றிற்குக் காட்டப்பட்டுள்ளது. இடுப்பிலிருந்து கணுக்கால்வரை நீளும் இவ்வாடை தற்காலப் பாவாடை போன்றே அமைந்துள்ளது. கச்சம் வைத்துக் கட்டிய பட்டாடை, கோவண ஆடைக்கு அடுத்த நிலையில் முத்தளத்திலுமாய்ப் பதினைந்து சிற்பங்களில் காட்டப்பட்டுள்ளது.



இடையாடைகள் தவிர தொடை தழுவும் இடைக்கட்டுகளும் பெரும்பாலான சிற்பங்களில் இடம்பெற்றுள்ளன. இவ்விடைக்கட்டுகள் இடுப்பின்கீழ், தொடைகளின் நடுப்பகுதிகளைத் தழுவிய படி வளையமிட்டு அமையுமாறு பக்கவாட்டில் முடிச்சிடப்பட்டுள்ளன. இம்முடிச்சுகளும் அவற்றின் தொங்கல்களும் இடுப்பின் இருபுறத்தும் காட்டப்பட்டுள்ளன.

இடுப்பாடையை இடையில் நிறுத்த அனைத்துச் சிற்பங்களிலும் அரைப்பட்டிகை காட்டப்பட்டுள்ளது. இவ்வரைப் பட்டிகையின் இரு முனைகளும் நடுவிலுள்ள பதக்கம் வழிச் செலுத்தப்பட்டு இறுக்கப் பட்டுள்ளன. முனைகள் இரண்டும் நாடாக்கள் போல இடுப்பளவிலும் சில சிற்பங்களிலும் தொடையளவிலும் நெகிழ்ந்துள்ளன. இவ்வரைப் பட்டிகையின் அமைப்பும் பதக்க வடிவும் பல சிற்பங்களில் மாறுபட்டு அமைந்துள்ளன. மிகச் சில சிற்பங்களில் மேகலையும உடனிருப்பாய்க் காணப்படுகிறது. விஷ்ணு சிற்பமொன்று அரைப்பட்டிகையின் கீழ் இணைக்கப்பட்ட குறங்குசெறியுடன் காட்சி தருகிறது. மேற்றள மேற்கு முக தெற்கு அடியவரின் இடுப்பில் மணிச்சரம் இருப்பது குறிப்பிடத்தக்கது. சிவபெருமானின் சிற்பங்கள் சிலவற்றில் இடுப்பணி போலப் பாம்புப் பிணையலும் காணப்படுகிறது.

பல்லவர் காலத்து வழக்கிலிருந்த ஆடைவகைகளை அடையாளம் காணவும், அவை அணியப்பட்ட முறைகளை அறிந்துகொள்ளவும் அத்யந்தகாமச் சிற்பங்கள் பெருந்துணை புரிகின்றன. சிவபெருமானுக்குப் பெரும்பாலும் எளிய ஆடையும் விஷ்ணுவிற்குப் பட்டாடையும் தந்திருப்பது அந்தந்த சமயஞ் சார்ந்த தொன்மங்களுக்கு விளக்கமாக அமைந்துள்ளது.

இத்தளியிலுள்ள பெரும்பாலான சிற்பங்கள் தோள் வளைகளும் கைவளைகளும் கொண்டுள்ளன. இவை இரண்டும் அற்றவர்களாக முருகன், நடுத்தள வாயிற்காவலர், பாணர், பரிசாரகர், மணியர், பூதர், காளிங்கர், அடியவர் நால்வர் உள்ளனர். கங்கை, தளிப்பெண் கால்களில் சிலம்பு உள்ளது. அம்மையப்பரில் அம்மையின் காலிலும் சோமாஸ்கந்தரில் உமையின் காலிலும் சிலம்பு காட்டப்பட்டுள்ளது. வடமுக வீணாதரர் காலணிகள் கொண்டுள்ளார்.

அத்யந்தகாமத்திலுள்ள நந்தி தவிர்த்த தளச் சிற்பங்கள் ஐம்பத்தொன்பதிலும் இருகையுடையவை முப்பத்தைந்து, இவற்றுள் ஒன்று கீழ்த்தளத்திலுள்ள அரசர் வடிவம் நடுத்தளத்தில் தளிப் பரிவாரத்தினர் ஐவருடன் சேர்த்துப் பதினாறுவர் இருகைகளுடன் காட்சியளிக்கின்றனர். மேற்றளத்தில் தென்முக சிவபெருமான் தவிர ஏனைய பதினெண்மரும் இருகையினராகவே வடிவெடுத்துள்ளனர்.

மேற்றள அடியவர்களுள் ஐவர் தவிர ஏனைய அனைவரும் ஒரு கையை இடுப்பிலோ அல்லது தொடையிலோ நிறுத்தி மறு கையில் மலர் கொண்டுள்ளனர். ஐவரில் ஒருவர் மட்டும் சூரியன், சந்திரன் போல இரு

கைகளிலும் மலர் கொண்டுள்ளார். ஏனைய நால்வரும் ஒரு கையை இடுப்பிலோ அல்லது தொடையிலோ இருத்தி மற்றொரு கையைக் கர்த்தரீ, போற்றி, கடகம் ஆகிய முத்திரைகளில் ஏதேனும் ஒன்றில் அமைத்துள்ளனர். நடுத்தளத் தளிப் பரிவாரத்தினர் அவரவர் பணிக்கேற்பப் பாத்திரம் சுமந்தபடியோ, பூத்தூவியவாறோ, இன்னிசை எழுப்பிய வண்ணமோ, மணியொலி செய்தபடியோ காட்சிதருகின்றனர்.

இத்தளிச் சிற்பங்களுள் மலரேந்தியவர்களாக நான்முகன், அம்மையப்பரின் அம்மைப்பகுதி, முருகன், சிவாச்சாரியார், சூரியன், சந்திரன், அடியவர்கள் பதின்மர் அமைந்துள்ளனர். இவர்களுள் சிவாச்சாரியார் பூக்குடலை ஏந்தியுள்ளார். ஏனையவர் கைகளில் பெரும்பாலும் தாமரை மொட்டுக்களே காணப்படுகின்றன. ஒரே ஒரு சிற்பம் நீலோத்பலம் ஏந்தியுள்ளது.

அத்யந்தகாம சிவச் சிற்பங்களின் கை முத்திரைகளாக கர்த்தரீ, ஆகூயம், கடியவலம்பிதம், ஆம்சாஸ்யம், கடி, கடகம், சூசி, விஸ்மயம், திரிபதாகம், அபயம், ஆலிங்கனம் ஆகியவையும் விஷ்ணு சிற்பங்களின் கை முத்திரைகளாகக் கர்த்தரீ, அபயம், கடி, ஆலிங்கனம் ஆகியவையும் அமைந்துள்ளன. பிற சிற்பங்களின் கை முத்திரைகளாகக் கடி, டோலம், கபித்தம், பதாகம், போற்றி, கடகம், கடியவலம்பிதம், அஞ்சலி ஆகியவற்றைக் கூறலாம். பின்னாளைய தெய்வப் படிமங்களில் பெருவழக்குப் பெற்ற அபய முத்திரையில் காக்கும் குறிப்புடன் எட்டுச் சிற்பங்கள் மட்டுமே அமைந்துள்ளன. இவற்றுள் ஆறு கீழ்த்தளத்தில் உள்ளன. நடுத்தளத்தில் தென்முக விஷ்ணுவும் மேற்றளத்தில் தென்முக சிவபெருமானும் அபயகரத்துடன் உள்ளனர். கை மடித்து, வாய்ப் பொத்திய பணிவுக் கோலத்தில் கருடனும்அதற்கான முனைப்பில் சண்டேசுவரரும் உள்ளனர்.

அத்யந்தகாமத்து சிவச் சிற்பங்களின் கைகளில் அக்கமாலை, மழு, பாம்பு, கவரி, உடுக்கை, வீணை, திரிசூலம், குண்டிகை, மான், கங்காளம், தலையோடு, சக்கரம் ஆகியன காணப்படுகின்றன. இவற்றுள் அக்கமாலை ஆறு சிற்பங்களிலும் மழு ஐந்து சிற்பங்களிலும் கவரியும் பாம்பும் மூன்று சிற்பங்களிலும் உடுக்கை, திரிசூலம் ஆகியன இரண்டு சிற்பங்களிலும் இடம்பெற்றுள்ளன. விஷ்ணுவின் கைகளில் சங்கும் சக்கரமும் இருக்க, நான்முகன் கைகளில் தாமரைகள், பிரம்ம சாஸ்தாவான முருகனின் கைகளில் அக்கமாலையும் தாமரையும் உள்ளன.

**கல்வெட்டுகள்**

அத்யந்தகாமத்தில் பல்லவ கிரந்தத்தில் வெட்டப்பட்ட, அளவில் சிறிய முப்பத்தொன்பது வடமொழிக் கல்வெட்டுகள் உள்ளன. அவற்றுள் இரண்டு 'அத்யந்தகாம பல்லவேசுவர கிருகம்' என்று இத்தளியை அழைக்கின்றன. மூன்றாம் தளக் கருவறை வாயிலின் மேல்நிலை முகப்பிலும், அதே தளக் கிழக்குச் சுவர் நடுப்பிதுக்கத்திலுள்ள சூரியன் கோட்ட மேற்சுவர் முகப்பிலும்



வெட்டப்பட்டுள்ள இப்பெயர் கொண்டு இவ்விறைத்தளி அத்யந்தகாமன் எனும் பெயருடைய பல்லவ அரசரால் உருவாக்கப்பட்டதென்பதை உணரலாம்.

இவை தவிர்ந்த ஏனைய முப்பத்தேழு கல்வெட்டுகளும் அரசவிருதுப் பெயர்களாய் அமைந்துள்ளன. இவற்றள் 'மஹாமல்லன்' எனும் ஒன்று மட்டும் இரண்டாம் தளப்படிவரிசையின் கிழக்குப் பிடிச்சுவரின் புறத்தே வெட்டப்பட்டுள்ளது. ஏனைய முப்பத்தாறு விருதுப் பெயர்களுள் ஒன்பது ஆதிதளத்திலும் இருபத்தாறு இரண்டாம் தளத்திலும் ஒன்று மூன்றாம் தளத்திலும் இடம் பெற்றுள்ளன.

இத்தளியில் காணப்படும் முப்பத்தேழு அரச விருதுப் பெயர்களுள் ஸ்ரீநரசிம்மன், புவனபாஜனன், ஸ்ரீமேகன், நயனமனோகரன், பராபரன், வாமன் எனும் ஆறு பெயர்கள் இருமுறையும் விதி எனும் விருதுப் பெயர் மும்முறையும் பொறிக்கப்பட்டுள்ளன. ஒருமுறைக்கு மேல் பொறிக்கப்பட்டு உள்ள நிலை நீக்கி எண்ணிக்கைக் கொள்ளின் இருபத்தொன்பது விருதுப் பெயர்களே எஞ்சும். முதலாம் மகேந்திரருக்குப் பிறகு தாம் எடுப்பித்தத் தளிகளை இத்தகு விருதுப்பெயர்களால் அலங்கரித்த ஒரே பல்லவ மன்னராக இராசசிம்மரே காட்சிதருகிறார். அவருடைய அகழ்வான அதிரண சண்டேசுவரம், அவர் கட்டுவித்த மல்லைக் கடற்கரைக் கோயில் வளாகம், காஞ்சிபுரம் இராஜசிம்மேசுவரம் ஆகியவற்றிலும் பனைமலையிலுள்ள குகைக் கோயிலிலும், அவர் வெட்டுவித்த வாயலூர் மற்றும் திருப்போரூர்க் கல்வெட்டுகளிலும் இத்தகு விருதுப் பெயர்கள் பலவாக இடம்பெற்றுள்ளன.

அத்யந்தகாமத்திலுள்ள இருபத்தொன்பது விருதுப் பெயர்களுள் ரணஜயம், மஹாமல்லன், பராபரன், சர்வதோபத்ரன், ஸ்ரீநிதி, காமலலிதன், அதிமானன், நயன மனோகரன், ஸ்ரீமேகன், அத்யந்தகாமன், ஸ்ரீபரன் புவனபாஜனன், ஸ்ரீநரசிம்மன் ஆகிய பதின்மூன்று பெயர்கள் ராஜசிம்மரின் விருதப் பெயர்களாய் அவருடைய படைப்புகளில் இடம்பெற்றுள்ளன. அரபுதிஹதசாசனன், லளிதன், ஸ்ரீத்ரைலோக்யவர்தனம் எனும் மூன்று பெயர்கள் சிறு மாறுதல்களுடன் அரபுதிஹதன், லளித விலாசன், த்ரைலோக்யநாதன் எனக் காஞ்சிபுரம் இராஜசிம்மேசுவரத்துக் கல்வெட்டு களில் இடம்பெற்றுள்ளன. இருபத்தொன்பது விருதுப் பெயர்களுள் பதின்மூன்று அதே போலவும், மூன்று சற்று மாறுபட்டும் அமைந்திருக்கும் நிலையில், ஏறத்தாழ அறுபது விழுக்காட்டிற்கும் மேற்பட்ட பெயர்கள் ராஜசிம்மரையே சுட்டுவது கவனித்தற்குரியது.

அத்யந்தகாமத்திலுள்ள விருதுப் பெயர்களில், தளியின் பெயராக அமைந்த 'அத்யந்தகாமன்', தளியின் மேற்கில் தளிப்பெயருடன் இணைந்து காட்சிதரும் 'ரணஜயன்', தனித்து வெட்டப்பட்டிருக்கும் 'மஹாமல்லன்' எனும் மூன்றையும் அவை அமைந்திருக்கும் இடம் நோக்கி மிகமுக்கியத்துவம் வாய்ந்தனவாகக் கொள்ளலாம். அத்யந்தகாமன், ரணஜயன், மஹாமல்லன்

இத்தளியிலுள்ள சிவபெருமானின் பதினாறு தோற்றங்களுள் இரண்டு முப்புரிநூல் பெறவில்லை. ஏனைய தெய்வத்திருமேனிகள் அனைத்தும் அம்மையப்பர் நீங்கலாக முப்புரிநூல் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. முப்புரிநூல் அணிந்துள்ள நாற்பத்தெழுவருள், இருபத்திருவர் அதை நிவீதமாக அணிந்துள்ளனர். எஞ்சிய இருபத்தைவர் உபவீத முறையில் அணிந்துள்ளனர். வதமூர்த்திகள் இருவரும் அலங்கரிக்கப்பட்ட முப்புரிநூல் பெற்றுள்ளனர்.

மார்பிற்கும் வயிற்றிற்கும் இடையில் காட்டப்பெறும் பட்டையான தோர் அணிகலன் உதரபந்தம். இது அத்யந்தகாமத்தில் பத்துச் சிற்பங்களில் மட்டுமே காணப்படுகிறது. முத்தளங்களிலும் உள்ள சிவபெருமானின் எந்தத் தோற்றத்திலும் உதரபந்தம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சிற்பங்களில் காட்டப்பட்டுள்ள கழுத்தணிகளைச் சரப்பளி, சவடி, பெருமுத்தாரம், கண்டிகை, ஆரம் என ஐந்து வகையாக அடையாளப் படுத்தலாம். இவ்வைந்தனுள் சரப்பளியே அதிக அளவில் அணியப் பெற்றுள்ளது. முத்தளச் சிற்பங்களிலும் இவ்வணி இடம் பெற்றிருப்பினும் அதிக அளவில் மேற்றளத்திலேயே இதைக் காணமுடிகிறது. கீழ்த்தளத்தில் நான்கு சிற்பங்களிலும் நடுத்தளத்தில் நான்கு சிற்பங்களிலும் காணப்படும் இவ்வணி, அகன்றமையும் கழுத்தணியாகும். கழுத்தையொட்டி அணியப்படும் கண்டிகையும் மெல்லிய அணியான சவடியும் முத்தளச் சிற்பங்களிலும் உள்ளன. இரண்டனுள் சவடி அதிக அளவில் அணியப்பெற்றுள்ளது. சிலச் சிற்பங்களில் ஆரத்திற்கும் சவடிக்கும் வேறுபாடு கண்டறிய முடியாத நிலையில், அவற்றை ஆரமாகவே கணக்கிட நேர்ந்துள்ளது. சரப்பளியைப் போலவே சவடியும் மேற்றளத்திலேயே அதிகம் காணப்படுகிறது. மேற்றள வாயிற்காவலருள் ஒருவர், விஷ்ணு, அரசர், இயமன், கருடன், ஜலந்தரன், காளிங்கன் ஆகியோர் கழுத்தணியாகப் பெருமுத்தாரம் காட்டப் பட்டுள்ளது. ருத்திராக்க மாலை சிவாச்சாரியாரால் அணியப்பெற்றுள்ளது.

கீழ்த்தளத்தில் அம்மையப்பரும் மேற்றளத்தில் கிழக்குமுக அடியவர்களும் வடபுறத்தார்களும் ஆரம் அணிந்துள்ளனனர். நடுத்தளத்தில் தளிப்பெண், நந்தியணுக்கர், ஜலந்தரன், வீணாதரர், மானுடநந்தி, காளிங்கன், கருடன், தென்கிழக்குச் சிவபெருமான் சிற்பங்களில் மணியாரம் இடம்பெற்றுள்ளது. இத்தளத்திலுள்ள விஷ்ணுவின் இரண்டு சிற்பங்களும் ஆரம் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று இருசரமணியாரமாக அமைந்துள்ளது. அம்மையப்பர் ஆரத்தில் ஆமைப் பதக்கம் கோக்கப்பட்டுள்ளது.

இக்கழுத்தணிகள் அனைத்துமே ஆடம்பரமற்ற நிலையில், எளிய ஆனால் கலைத்திறம் மிக்கனவாகச் செதுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான சிற்பங்களின் கழுத்தில் ஓர் அணிகலன் மட்டுமே காணப்படுகிறது. கீழ்த்தளத்தில் அம்மையப்பர் தவிர ஏனையவர் அனைவருமே ஒரு கழுத்தணி மட்டுமே பெற்றுள்ளனர். நடுத்தளத்தில் விஷ்ணு, இயமன், ஜலந்தரன், கருடன் ஆகியோருக்கு மட்டுமே இரண்டு கழுத்தணிகள் பெய்யப் பட்டுள்ளன. சிவபெருமானின் எந்தத் திருத்தோற்றமும் ஒரு கழுத்தணிக்கு மேல் பெறவில்லை என்பதும் பெண்கள் திருமேனிகளிலும் ஓர் அணிகலனே



கழுத்தணியாகக் காட்டப்பட்டுள்ளது என்பதும் இவ்வணி அவர்தம் மார்பக மேல்விளிம்பு தொட்டவாறே அணியப் பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கன.

கழுத்தில் அணிகலன் ஏதும் அற்றவர்களாக உள்ள நால்வருமே நடுத்தளத்தினர். இவர்களுள் கங்காரதர் மட்டுமே இறைவடிவம். எஞ்சிய மூவருள் இருவர் தளிப்பரிவாரத்தினரான பாணரும் பரிசாரகரும், வாயிற்காவலர் முழுமை பெறாமையின் கழுத்தணியும் கொள்ளவில்லை.

பனையோலைக் குண்டலம், பூட்டுக் குண்டலம், மகர குண்டலம், சிறு குண்டலம், செவிப்பூக்கள் ஆகியன காதணிகளாகக் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் பனையோலைக் குண்டலமே அதிக அளவிலான சிற்பங்களில் காணப்படுகிறது. இருசெவிகளிலும் பனையோலைக் குண்டலங்களுடன் பதினேழு சிற்பங்களும், ஒரு செவியில் பனையோலைக் குண்டலம் பெய்தவாய்ப் பதினேழு சிற்பங்களும் உள்ளன. கீழ்த்தளச் சிற்பங்களில் முருகனும் மேற்குமுக வடசிவபெருமானும் மட்டுமே இரு செவிகளிலும் பனையோலைக் குண்டலங்கள் கொண்டுள்ளனர். நடுத்தளத்தில் தளிப்பெண், வாயிற்காவலர், சண்டேசுவரர், கருடன், இயமன், ஜலந்தரன், பூதம், கிருஷ்ணன் ஆகியோர் இரு செவிகளிலும் பனையோலைக் குண்டலம் அணிந்துள்ளனர். மேற்றளத்தில் வாயிற்காவலர்களும், ஐந்து அடியவர்களும் பனையோலைக் குண்டலர்களாய்க் காட்சி தருகின்றனர்.

ஒரு செவியில் பனையோலைக் குண்டலம், மேற்றளத்தில் மூன்று சிற்பங்களிலும் நடுத்தளத்தில் பதின்மூன்று சிற்பங்களிலும் கீழ்த்தளத்தில் ஒரு சிற்பத்திலும் இடம்பெற்றுள்ளது. இவற்றுள் சில பனையோலைக் குண்டலமற்ற மற்றொரு செவியில் செவிப்பூவோ, பூட்டுக் குண்டலமோ கொண்டுள்ளன. எஞ்சியுள்ளன, ஒரு செவியில் மட்டுமே அணிகலன் பூண்டவையாய் அமைந்துள்ளன.

நடுத்தளத்திலுள்ள பன்னிரண்டு சிவச் சிற்பங்களுள் பதினொன்று ஒரு செவியில் மட்டுமே பனையோலைக் குண்டலம் கொண்டுள்ளன. அவற்றுள் ஆறு வலச்செவியிலும், ஐந்து இடச்செவியிலும் உள்ளன. சிவபெருமானுக்குப் பிடித்த செவியணி பனையோலைக் குண்டலமென்பதும் அது இரு செவிகளில் ஏதேனும் ஒன்றில் மட்டுமே அமையுமென்பதும் இதனால் அறியப்படும். சிவபெருமானின் அணுக்கத் தொண்டர்களும் (சண்டேசுவரர், பூதம், நந்தி) பனையோலைக் குண்டலத்தையே விரும்பி அணிந்துள்ளனர்.

பனையோலைக் குண்டலம் போலவே பூட்டுக் குண்டலமும் முத்தளச் சிற்பங்களிலும் இடம் பெற்றுள்ளது. நடுத்தளத்திலுள்ள விஷ்ணுவின் இரு தோற்றங்களும் அணிந்துள்ள குண்டலங்களை இன்னவையென உறுதிப்படக் கூறமுடியவில்லை என்பதால் அவற்றையும் பூட்டுக் குண்டலங்களாகக் கருதுவதில் பிழையில்லை. ஒரு செவியில் மட்டும் பூட்டுக் குண்டலம் கொண்ட சிற்பங்களாகக் கீழ்த்தளத்தில் அம்மையப்பரையும் ஹரிஹரரையும் மேற்றளத்து அடியவர் ஒருவர் சிற்பத்தையும் குறிக்கலாம்.

எனும் இம்மூன்று முதன்மைப் பெயர்களுமே இராஜசிம்மரின் விருதுப் பெயர்களாக அவருடைய பிற படைப்புகளில் பரவலாக இடம்பெற்றுள்ளன. பனைமலைக் குகைக்கோயில், கடற்கரைக் கோயில் வளாகப் பொறிப்புகள், அதிரணசண்டேசுவரம், வாயலூர்த் தூண் பொறிப்புகள், காஞ்சிபுரம் இராஜசிம்மேசுவரம் ஆகிய இடங்களில் ரணஜயம் என்ற பெயரும் பனைமலைக் குகைக்கோயில் தவிர்த்த பிற இடங்களிலும் திருப்போரூர்க் கல்வெட்டுப் பொறிப்புகளிலும் அத்யந்தகாமன் எனும் பெயரும் காணப்படுகின்றன.

மஹாமல்லன் என்ற பெயர் வாயலூர் பொறிப்புகளிலும் காஞ்சிபுரம் இராஜசிம்மேசுவரத்திலும் வெட்டப்பட்டுள்ளது. இம்மூன்று பெயர்களையும் தம்முடைய விருதுப் பெயர்களாகக் கொண்டவராக இராஜசிம்மரைத் தவிர வேறெந்தப் பல்லவ மன்னரையும் வரலாறு நமக்குக் காட்டவில்லை. இந்நிலையில், அத்யந்தகாமன், ரணஜயம் எனும் பெயர்களைத் தம்முடைய இரண்டு படைப்புகளிலும் கொண்டுள்ள இராஜசிம்மரை அத்யந்தகாமத்தின் படைப்பாளியாகக் கொள்ளலாம். இராஜசிம்மரின் பிறப்புப் பற்றிப் பேசும் இராஜசிம்மேசுவர விமானக் கல்வெட்டு, 'உக்ரதண்டனிடமிருந்து கடமை உணர்வு மிக்க ஸ்ரீஅத்யந்தகாமன் பிறந்தார்' என்று இவரைக் குறிப்பிடுவதும் கணேசரதக் கல்வெட்டு, 'ரணஜயம் என்ற பெயரால் புகழடைந்தவரான அரசர் அத்யந்தகாமன் இந்த சிவன் கோயிலைச் செய்வித்தார்' என்று எடுத்துரைப்பதும் இந்தக் கருதுகோளுக்கு அரணாகின்றன.

**பார்வை நூல்கள் / கட்டுரைகள்**

1. Adya Rangacharya, Natya Sastra, English Translation with critical Notes, IBH Prakashana, Bangalore, 1986.
2. Alexander Rea, Pallava Architecture, Antiquarian Book Sellers and Publishers, Varanasi, 1970.
3. Anne Marie Gaston, Siva in Dance, Myth and Iconography, Madras, Oxford University Press, Madras, 1982.
4. Gopinatha Rao, T.A., Elements of Hindu Iconography, Two vols., Motilal Banarsidass, Madras, 1974.
5. Kalaikkovan, R., 'Architectural Traditions and Innovations of Tamils', Tamil in An internatinoal Arena 2002, The Centre for the Arts, National University of Singapore, 2004.
6. Krishna Sastri, H., South Indian Images of Gods and Goddesses, Asian Educational Services, New Delhi, 1986.
7. Longhurst, A.H., Pallava Architecture, Two vols, Cosmo Publications, New Delhi, 1982.
8. Manomohan Gosh (Translator), The Natyasastra, Manisha Grantalaya Pvt. Ltd., Calcultta, 1967.



9. Michael Lockwood with Vishnu Bhat, A., Gift Siromoney, Dayanandan, P., Pallava Art, Tambaram Associates, Chennai, 2001.
10. Michael W.Meister (Ed.), Encyclopaedia of Indian Temple Architecture, South India, Lower Dravidadesa (200 B.C. - A.D. 1324) American Institute of Indian Studies, New Delhi, 1983.
11. Srinivasan, K.R., The Dharmaraja Ratha and its Sculptures - Mahabalipuram, Abhinav Publications, New Delhi, 1975.
12. .......... Cave-Temples of the Pallavas, ASI, New Delhi, 1964.
13. .......... Temples of South India, National Book Trust, New Delhi, 1998.
14. Stella Kramarisch, Indian Sculpture, Motilal Banarsidass, Delhi, 1981.
15. கணபதி ஸ்தபதி, வை, சிற்பச் செந்நூல், தொழில் நுட்பக் கல்வி, இயக்கக வெளியீடு, சென்னை, 1978.
16. கலைக்கோவன், இரா., சோழர் கால ஆடற்கலை, அலமு பதிப்பகம், சென்னை, 2003.
17. .......... தலைக்கோல், சேகர் பதிப்பகம், சென்னை, 2004.
18. .......... 'பல்லவர் காலக் கட்டடக் கலை, சிற்பக்கலை', இந்து கலாச்சாரம் - கோயில்களும் சிற்பங்களும், இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2001.
19. நளினி, மு.கலைக்கோவன், இரா, அத்யந்தகாமம், டாக்டர் மா.இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய வெளியீடு, 2004.
20. .......... மகேந்திரர் குடைவரைகள், அலமு பதிப்பகம், சென்னை, 2004.
21. .......... பெண் தெய்வ வழிபாடு தோற்றமும் வளர்ச்சியும், டாக்டர் மா.இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய வெளியீடு, 2005.
22. வரலாறு ஆய்விதழ் 1-13 தொகுதிகள், டாக்டர் மா.இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய வெளியீடு, திருச்சிராப்பள்ளி.